*8*

# "என்னில் நிலைத்திருங்கள்"

## (யோவான் 15)

*"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (வசனங்கள் 7-11).*

இயேசுவில் நிலைத்திருத்தல் பற்றிப் புதிய ஏற்பாட்டில் உள்ள மாபெரும் வசனப் பகுதிகளில் ஒன்றாக யோவான் *15:7-11* விளங்குகிறது. இவ்வசனப் பகுதி, நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய வியாழக்கிழமை இரவில் தமது அப்போஸ்தலர்களுடன் நடத்திய உரையாடலின் ஒரு பகுதியை எடுத்துரைக்கிறது. அவர்களுக்கு முன்பாக இருந்த இருளான எதிர்காலத்தைக் குறித்து அவர்களை அவர் ஆறுதல்படுத்துகையில், அவருக்குள் நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார். "அவருக்குள்" என்ற சொற்றொடர், அவர்களுக்கு அவர் முன்வைத்திருந்த போதனைகள், அவர்களுக்கு அவர் கொண்டுவந்திருந்த வாழ்வின் வட்டாரம், அவர்களுடன் அவர் பகிர்ந்துகொண்டிருந்த அன்பின் சூழ்நிலை மற்றும் அவர்களுக்கு அவர் மாத்திரமே அளிக்கக்கூடிய பலம் ஆகியவற்றை மறைமுகமாக உணர்த்துகிறது.

இந்த ஊக்குவித்தலானது, சற்று முன்னர் இயேசு பயன்படுத்தியிருந்த *(15:1-5)* திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் பற்றிய ஒப்புவமையைத் தொடர்ந்து வந்தது. அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு, "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்" என்று கூறியிருந்தார் *(15:4)*. திராட்சச் செடியைவிட்டுத் தனித்து இருக்கும் நிலையில் எந்தக் கிளையும் கனியெதையும் கொடுக்க இயலாது, அதுபோன்றே இயேசுவை விட்டுத் தனித்து இருக்கும் நிலையில் அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய வாழ்வு எதையும் கொண்டிருக்க இயலாது. அவரது பிதா திராட்சத் தோட்டக்காரராக இருக்கிறார், அவரே திராட்சச் தோட்டத்திற்குப் பொறுப்பாளராக இருக்கிறார். இயேசுதாமே திராட்சச் செடியாக இருக்கிறார் மற்றும் அவரது அப்போஸ்தலர்களும்

சீஷர்களும் கொடிகளாக இருக்கின்றனர். மறைமுகமான கருத்தில் நாம், கொடிகளாகும்படி பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார் என்று முடிவுசெய்ய இயலும்.

இயேசுவினிடத்தில் அப்போஸ்தலர்கள் விசுவாசம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டியதற்கான காரணங்களை இயேசு பட்டியலிடுவது போன்று இவ்வசனப் பகுதி தொடர்ந்து முன்செல்கிறது. செயல்விளைவில் அவர், "ஏன் என்பது இங்குள்ளது. என்னில் நீங்கள் நிலைத்திருப்பதைத் தடைசெய்யும்படி, எவரொருவரையும், எந்தச் சூழ்நிலையையும் அல்லது எந்தத் துன்பத்தையும் நீங்கள் அனுமதித்து விடக்கூடாது. எதிர்ப்பின் அலைகள் எப்படி இருந்தாலும், என்னைப் பற்றிக்கொண்டு எனக்குள் வாழ்ந்திருங்கள்" என்று அவர்களிடம் கூறினார். அவருக்குள் நிலைத்திருக்கும்படி, அவர்களுக்கு அவர் கொடுத்த இந்தத் தூண்டுதல்கள் நமக்கும் உண்மையானவைகளாக உள்ளன.

இயேசு அவர்களிடத்தில் என்ன கூறினார்?

## "ஜெபத்தின் சலுகையை மகிழ்வுடன் அனுபவியுங்கள்"

> *"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (15:7).*

*''என்னில் நிலைத்திருப்பவர்கள் ஜெபத்தின் சலுகையைக் கொண்டிருப்பார்கள்.''* இயேசுவுக்குள் நிலைத்திருப்பவர்கள் மாத்திரமே உண்மையாகவே ஜெபம் செய்ய முடியும், ஏனெனில் உண்மையான ஜெபம் என்பது இயேசுவின் நாமத்தில் மற்றும் அதிகாரத்தில் ஏறெடுக்கப்படுகிறது மற்றும் அது இயேசுவின் மனநிலையைக் கொண்டுள்ளது.

ஜெபம் என்பது இயேசுவுடன் ஒரு உடன்படிக்கை வாழ்வில் தொடர்ந்து வாழ்பவர்களின் தனிச்சலுகையாக உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையின் நாம், அவரது வசனத்தில் "நிலைத்திருக்கிறோம்" அல்லது "வாழ்ந்திருக்கிறோம்." அவரது வசனங்களுக்கு நாம் கீழ்ப்படிதல் என்பது, அவரது வசனங்கள் நமக்குள் நிலைத்திருக்க அனுமதித்தல் என்று விவரிக்கப்படும் அளவிற்கு எழுகிறது. நாம் உண்மையாகவே கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கும்போது, நாம் இயேசுவின் போதனைகளுடன் ஒன்றாகிறோம். நாம் நேர்ப்பொருளில் அவரது சிந்தனைகளுடன் சிந்திக்கும்படி அவரது வசனங்கள் நமது மனங்களை நிரப்புகின்றன.

இயேசு தமக்குள் நிலைத்திருப்பவர்களுக்குத் தமது வல்லமை, அதிகாரம் மற்றும் நாமம் ஆகியவற்றைக் கொடுக்கிறார். "உங்களுடைய தேவை, விருப்பம் அல்லது ஆவல் ஆகியவற்றை நான் பிதாவினிடத்திற்கு எடுத்துச் செல்வேன்" என்று அவர் கூறினார். அவருக்குள் நிலைத்திருப்பவர்கள் அவருடைய சித்தத்தைத் தொடர்ந்து நாடுவதால், இவ்வாறாக இயேசுவினால் கனப்படுத்தப்படுகின்றனர். இந்த அமைவில் பிதாவை நோக்கிய ஜெபம் மலருகிறது.

## "அதிக கனிகொடுங்கள்"

> *"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார்,*

*எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (15:8).*

*"என்னில் நிலைத்திருப்பவர் அதிக கனிகளைக் கொடுக்க முடியும்."* இயேசுவின் மூலமாக மாத்திரமே நாம், ஒரு உண்மையான சீஷத்துவம் உண்டாக்குகிற, ஆவிக்குரிய வாழ்வு, தெய்வீக ஞானம் மற்றும் தூய்மையான உட்கண்ணோக்கு ஆகிய கனிகளைக் கொண்டிருக்கிறோம்.

"கனி" (*karpos*) என்ற வார்த்தை, ஒரு சீஷர், தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய சித்தத்தை நிறைவேற்றுகையில் வாழ்கிற முழுமையான மற்றும் வெற்றிகரமான வாழ்வைக் குறிக்கும் ஒரு பொதுவான சொற்றொடராக உள்ளது. அவருக்குள் நிலைத்திருக்கும் வார்த்தையானது, அவரது வாழ்வு, செயல்கள் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றில் பிரதிபலிக்கப்படுகிறது. மரமானது நெருப்பில் இடப்படும்போது, நெருப்பானது விரைவிலேயே மரத்தினுள் வந்து இருக்கிறது. மரமானது நெருப்பின் ஆற்றலுடன் சுவாலிக்கிறது மற்றும் ஒளிவீசுகிறது. கிறிஸ்துவின் சீஷருடைய வாழ்விலும் இதே போன்ற விஷயம்தான் நடைபெறுகிறது: அவர் இயேசுவுக்குள் வாழ்கிறார், மற்றும் அவருக்குள் இயேசு வாழ்கிறார். அவர் உலகத்தில் கிறிஸ்துவின் ஊழியத்தைச் சுமந்து செல்லுகையில், கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் இருதயம் ஆகியவற்றின் ஆச்சரியம் நிறைந்த அம்சங்கள், சீஷருக்குள் கடந்து, அவர் மூலமாகப் பாய்ந்தோடுகிறது.

## "பிதாவை மகிமைப்படுத்துங்கள்"

*"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார் ..." (15:8).*

*"என்னில் நிலைத்திருப்பவர்கள் கனிகளைக் கொடுக்கையில் பிதாவை மகிமைப்படுத்துவர்."* பிதா தமது குமாரனை அனுப்பினதன் நோக்கம் நிறைவேற்றப்படுகையில் அது பிதாவுக்கு மகிமையைக் கொண்டுவருகிறது. இருப்பினும், சீஷர் ஒருவர் இயேசுவுக்குள் வந்து அவரை (இயேசுவே)ப் பின்பற்றி, அவரின் (இயேசுவின்) மனதைக் கொண்டே சிந்தித்து அவருடைய (இயேசுவினுடைய) வாழ்வைக் காட்சிப்படுத்தும்போது மாத்திரமே, அந்த நோக்கம் செயல்தூண்டப் படமுடியும்.

மாபெரும் வடிவமைப்பு, துய்மையான அன்பு மற்றும் பிதாவின் நிறைவாழ்வு ஆகியவற்றினால் பிரகாசிக்கிற, பூமிக்குரிய ஒவ்வொரு வாழ்விலும், தேவனுடைய நித்திய நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. சீஷரின் செயல்கள், இயேசுவின் கையெழுத்தையும் தேவனுடைய ஆச்சரியமான மகிமையையும் பிரதிபலிக்கிற வனப்பு மிகுந்த வெளிச்சங்களாகக் கனன்று எரிகின்றன.

## "எனது உண்மையான சீஷர்களாக இருங்கள்"

*"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (15:8).*

*"என்னில் நிலைத்திருப்பவர்களே உண்மையில் என் சீஷர்களாக இருக்கின்றனர்."* சீஷத்துவம் என்பது, உறுப்பினர்த்துவ அட்டையைப் பிடித்திருத்தல் அல்லது "நான் (இதற்கு) உரியவன்/ள்" என்ற விபரப்பட்டியை

அணிதல் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது; இது வெறும் தகவலைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. சீஷத்துவம் என்பது ஒரு அடிப்படைச் சத்தியத்தில் இருந்து கீழிறங்கி, சீஷர்கள் என்ற வகையில் நாம், "இயேசுவுக்குள் நான் நிலைத்து இருக்கிறேனா இல்லையா?" என்று நம்மையே கேட்டுக்கொண்டாக வேண்டும். நாம் பின்வரும் மதிப்பிடும் செயலைப் பயன்படுத்த முடியும்: "நான் அவருக்குள், அவர் மூலமாக மற்றும் அவருக்காக வாழ்ந்துகொண்டு இருந்தால், நான் அவருக்குள் மாத்திரமே கொண்டு வர முடிகிற கனியைக் கொடுத்துக் கொண்டிருந்தால் - மற்றும் அப்போது மாத்திரமே நான் இயேசுவின் உண்மையான சீஷனாக இருக்கிறேன்!"

## "என் அன்பில் நிலைத்திருங்கள்"

> ''பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்'' (15:9, 10).

*"என்னில் நிலைத்திருக்கிறவர்கள் என் அன்பில் நிலைத்திருக்கின்றனர்."* இயேசுவின் அன்பானது, மிக உயர்ந்த மட்டத்திலான வாழ்வை அருளும் அவரது பண்புடனும் நமக்கான மாபெரும் ஆசீர்வாதங்களுடனும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பூமிக்குரிய ஒரு தந்தை தமது பிள்ளைகள் மீது ஆழமாக அன்புகூருகிறார் மற்றும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நல் வாழ்வைத் தருவதற்கும் அர்த்தம் நிறைந்த எதிர்காலத்தைத் தருவதற்குமான வாய்ப்புக்களுக்காக அவர் முடிவின்றி உழைக்கிறார். அவரது பிள்ளைகள், நன்றி நிறைந்த உணர்வுடன் இந்த வாய்ப்புக்களில் இருந்து பயனடைந்து இவற்றை நம்பிக்கையுடன் பற்றித் தொடரும்போது, அவர்கள் தங்கள் தந்தையின் அன்பில் நடந்துகொள்கின்றனர். இயேசுவில் நிலைத்திருத்தல் என்பது, அவரது அன்பு நமக்காகச் செதுக்கியுள்ள பாதை வழியில் நடத்தல் என்று அர்த்தப்படுகிறது. அவரது சீஷர்கள், தங்களுக்கு அவர் போதித்தவற்றில் நிலைநிற்கும்போது, அவர்களுக்காக அவர் தந்துள்ள நல்வாழ்வை நாடப் பற்றித் தொடரும்போது, அவர்மீது அன்பு கூருகின்றனர். இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடித்தலின் மூலமாக, அவர் பிதாவின் கட்டளைகளைக் கடைப்பிடித்ததினால் பிதாவின் அன்பில் நிலைத்திருந்தது போல, நாமும் அவரது அன்பில் நிலைத்திருக்கிறோம்.

## "சந்தோஷத்தின் நிறைவை அறிந்துகொள்ளுங்கள்"

> "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (15:11).

*"என்னில் நிலைத்திருப்பவர்கள் சந்தோஷத்தின் நிறைவை அறிகின்றனர்."* இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கொண்டுவந்த மற்றும் அவர் நமக்குக்

கொண்டுவருகிற சந்தோஷம், நாம் அவருக்குள் நிலைத்திருக்கும்போது மாத்திரமே அதன் நிறைவுத்தன்மையை அடைய முடியும். இயேசு இந்த சந்தோஷத்தைக் கொடுப்பது மாத்திரமின்றி, அது வளர வேண்டிய அமைவையும் அவர் அளிக்கின்றார். நாம் அவருக்குள், அவரது தெய்வீக ஆசீர்வாதங்கள் சூழ வாழுகையில், அவர் நமக்கு, தமது நித்திய ஆசீர்வாதங்கள் கொண்டுவருகிற ஆறுதலையும் அவரது எல்லையற்ற வல்லமை அளிக்கும் உறுதிப்பாட்டையும் நமக்கு அருளுகிறார். அவருடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்மை நிலைகளாக உள்ளன என்பதை அறிந்த நிலையிலும், அவரது வல்லமையானது நமக்குள் என்றென்றும் செயல்பட முடியும் என்ற உணர்வு கொண்ட நிலையிலும், நாம் அவருடன் நடக்கையில், நமது வழியை ஒளியூட்டும் ஒரு சந்தோஷத்தினால் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

## முடிவுரை

"என்னில் நிலைத்திருங்கள்" என்ற இயேசுவின் சொற்றொடர், மிகையாக வலியுறுத்தப்பட இயலாது. அது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது என்பதை நாம் அறியும்படி அவரே அதை வலியுறுத்தியுள்ளார். இந்தச் சொற்றொடர் தனது இரண்டு வார்த்தைகளுக்குள், நாம் அறிந்து செய்ய வேண்டிய ஒவ்வொன்றையும் கொண்டுள்ளது. இது கூறுவதற்கு எளிதாக உள்ளது, இருப்பினும் இது பிதாவினுடைய குமாரனைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவருக்கும் பிதா கொண்டுள்ள நித்திய திட்டத்தின் மொத்தக் குறியிலக்கை உள்ளடக்குகிறது. இயேசுவில் நிலைத்திருத்தலைக் காட்டிலும் பெரியதாக வேறு எதையும் எவரொருவரும் செய்துவிட இயலாது, மற்றும் அவருக்குள் நிலைத்து இருத்தலைக் காட்டிலும் குறைவான ஏதொன்றையும் எவரும் செய்யக் கூடாது. இந்தத் திறவுகோல் கூற்றானது இயேசு நமக்குக் கொடுத்த நிறைவான போதனைகளில் ஒன்றாக உள்ளது, மற்றும் நாம் இதை ஒருக்காலும் மறக்கக் கூடாது.

---

*"இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1 யோவான் 2:28).*

*"அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:24).*